மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, மாநகராட்சியிலே இது போன்ற குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை இந்த அவையிலே அறிவித்திருக்கிறேன். நேற்று கூட இயக்குநருடன் தொடர்பு கொண்டு உடனடியாக லாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் சொல்லி, அதற்கான ஏற்பாடுகள் இன்று முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நிச்சயமாக இந்த வறட்சிக் காலத்தில் குடிநீர்ப் பிரச்சினை இந்த நகரத்திலே தெரியாத அளவிற்கு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். மேலும் நீங்கள் சுட்டிக் காட்டியிருக்கின்ற குறிப்பிட்ட சில தகவல்கள் தவறாக இருக்கலாம். சில அரசியல் நோக்கங்களோடு அந்த இளைஞர் அணியின் மீது குற்றம் சுமத்த வேண்டுமென்ற எண்ணத்திலே கூட சொல்லப்பட்டிருக்கலாம். அவைகளையும் தீர விசாரித்து, நிச்சயமாக அது உண்மையாக இருக்குமானால், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) போராட்டம் நடத்தும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுடன் நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து.

*திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் இருக்கக் கூடிய தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்யக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி ஒரு வேலை நிறுத்தம் வந்தால், அதிலுள்ள 35,000 தொழிலாளர்களும், கரும்பு வெட்டி அனுப்பக் கூடிய விவசாயிகளும், கரும்பு வெட்டக் கூடிய கூலிகளுமாக $3\frac{1}{2}$ இலட்சம் பேர்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணம், அவர்களுடைய பழைய ஊதிய ஒப்பந்தம் 1985 ஜூன் மாதத்தோடு முடிவடைந்துவிட்டது. 4 ஆண்டுகளாக புதிய ஊதிய உயர்வு எதுவும் கிடையாது. ஆனால் இடைக்கால நிவாரணமாக ஒரு சிறு தொகையை அவர்கள் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆளுநர் அரசு இருந்த போதிலிருந்தே பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இப்போது கூட பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு வந்த பிறகு 17-2-89-ல் தொழிலாளர் நல இலாக்காவிலிருந்து மார்ச் மாதம் 15 ஆம் தேதிக்குள் எப்படியும் அது முடிவடைந்து விட வேண்டுமென்று புரொசிடீங்ஸ் போட்ட பிறகும் கூட, அது முடிவடையவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இருந்தபோதிலும் கூட, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வராமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது பற்றி அண்மையில் பேசப்பட்டும், கிட்டத்தட்ட ஒரு முறிவு நிலைமை இப்போது ஏற்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. அதற்கு அடிப்படையான காரணங்கள்,

இரண்டு பிரச்சினைகளில் உடன்பாடு ஏற்படவில்லை என்று தெரிகிறது. ஒன்று அவர்கள் 15 சதவீதம் ஊதிய உயர்வு கேட்கிறார்கள். இரண்டாவது கேஷுவல் தொழிலாளகர்களுக்கு ஆக்குபேஷனல் வேஜ் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆக்குபேஷனல் வேஜ் கொடுக்கப்படவேண்டுமென்று உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பும் இருக்கிறது. பல்வேறு வேஜ் போர்டுகளுடைய தீர்ப்பும் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதை ஒரு பிரின்சிபிளாக ஏற்றுக்கொண்டு, இந்தப் பிரச்சினையில் ஒரு உடன்பாடு காண்பதற்கும், இந்த 15 சதவீதம் ஊதிய உயர்வு சம்பந்தமாகவும் பரிசீலனை செய்து எப்படியாவது ஒரு உடன்பாட்டை அவர்களிடத்திலே கொண்டு வந்து இப்படிப்பட்ட ஒரு பெரிய வேலை நிறுத்தத்தையும் அதனால் $3\frac{1}{3}$ இலட்சம் பேர்களுக்கு ஏற்படுகிற பாதிப்பையும் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரைத் தொழிலாளர்களுடைய போராட்டம் பற்றியும் அவர்களுடைய பேச்சு வார்த்தை தொடர்ந்து நடப்பது பற்றியும் சில விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் இந்த மன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பேச்சு வார்த்தை ஊதிய உயர்வு மற்றும் அக விலைப்படி உயர்வு போன்ற பல்வேறு பட்ட கோரிக்கைகளை மையமாக வைத்து தொழிற்சங்கத்தினர் அதிகாரிகளோடு தொடர்ந்து பேச்சு வார்த்தை செய்துகொண்டிருந்தார்கள். ஒரு கட்டத்தில் ஒரு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டவுடன் அவர்களை நானே நேரிடையாக அழைத்து தொடர்ந்து 2, 3 நாட்களாக பேச்சு வார்த்தை நடந்துக் கொண்டிருக்கிறது. இன்றுகூட அந்தப் பேச்சு வார்த்தை நடைபெற இருக்கிறது. ஆகவே எந்த வகையிலும் ஒரு இணக்கமான முடிவை வெகு விரைவில் ஏற்படுத்தவும் அங்கே வேலை நிறுத்தமோ மற்றைய வேறு விதமான முடிவுகளுக்கோ இடம் இல்லாமல் சுமூகமான முடிவை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) சென்னை பொது மருத்துவமனையில் பணியாற்றிய இருதய நோய் சிகிச்சை நிபுணர் பதவி விலகியுள்ளது குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இன்று சென்னையில் இருக்கிற அரசு பொது மருத்துவமனையில் எனது ஊரைச் சேர்ந்த ஒரு பேஷன்டை அழைத்துச் சென்று போய் இருதய நோய்ப் பிரிவில் ஆபரேஷன்